Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 256 | செவ்வாய்க்கிழமை 09 ஓகஸ்ட் 2022 | ஆடி 24 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 விலை : ரூ. 50

முச்சந்தி முரளி




"ஆரோ இலங்கைக்கு கப்பலில செய்வினை, சூனியம் வைச்சிட்டாங்கள் போலதான் கிடக்குது"

# கப்பல் வருகையால் சிக்கலில் இலங்கை!

## முற்றுகிறது இராஜதந்திர நெருக்கடி



கொழும்பு, ஓகஸ்ட் 9

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்களைக் குழப்புவதை நிறுத்தவேண்டும். சீனக் கப்பலுக்கான எதிர்ப்பு அர்த்த மற்றது. பாதுகாப்புக் கரிசனைகளை முன்வைப்பது இலங்கைக்கு அழுத் தம் கொடுக்கும் செயல் அர்த்தமற்ற நடவடிக்கை. சீனாவின் விஞ்ஞான ஆய்வுகளை நியாயமான மற்றும் விவேகமான முறையில் பார்க்கவேண்டு மென்று வேண்டுகோள் விடுக்கின்றேன் -இவ்வாறு சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங்வென்பின் தெரிவித்துள்ளார். 11

## சமையல் எரிவாயு விலையில் சரிவு

கொழும்பு, ஓக.9

சமையல் எரிவாயு விலைகளைக் குறைத் துள்ள லிட்ரோ நிறுவனம், புதிய விலைப் பட்டியலை அறிவித் துள்ளது.

12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 246 ரூபாவால் 11

## அரிசி விலையும் குறையும்?

கொழும்பு, ஓக.9

எதிர்வரும் தினங்களில் அரிசியின் விலைகுறைவடையலாம் என்று அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித் துள்ளது.

இந்தியா மற்றும் சீனாவில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுவதால், சந்தையின் கேள்வியை 11

## எரிபொருள் வரிசையில் உழவு இயந்திரம் திருட்டு

கிளிநொச்சி, ஓக.9

எரிபொருள் நிரப்புவதற்காக வரிசையில் விடப்பட்ட உழவு இயந்திரம் ஒன்று திருடப்பட்டுள்ளது என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை பரந்தன் நகரப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் எரிபொருள் பெறுவதற்காக கிளிநொச்சி, 11

## பாக். போர்க் கப்பலும் வருகிறது இலங்கைக்கு!

கொழும்பு, ஓக.9

பாகிஸ்தானின் "தைமூர்" போர்க் கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. சீன ஆய்வுக் கப்பலின் இலங்கை வருகை பெரும் சர்ச்சையாக மாறியிருக்கும் நேரத்தில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சீனாவில் கட்டமைக்கப்பட்ட பி.என்.எஸ். தைமூர் என்ற இந்தப் போர்க் கப்பல் ஷங்காய் நகரில் இருந்து கராச்சிக்குச் செல்லும் வழியில் நல்லெண்ண அடிப்படையில் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடுகின்றது என்று தெரிவிக்கப் படுகின்றது. இந்தக் கப்பல் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை நங்கூரமிட்டிருக்கும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. 11

## பொலிஸ், இராணுவத்துக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு, ஓக.9

இலங்கையின் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் தன்னிச்சையான நடவடிக்கைகளை ஆட்சேபித்து, உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 11

## திருமுறிகண்டி யுவதி மாயம்!

முல்லைத்தீவு, ஓக.9

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட திருமுறிகண்டி, வசந்த நகரில் யுவதி ஒருவர் காணாமற் போயுள்ளார் என்று பொலிஸில் முறைப்பாடு 11

## இன்று விசேட பாதுகாப்பு

கொழும்பு, ஓக.9

நாடு முழுவதுமுள்ள பிரதான நகரங்களில் இன்று பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நிலையில், நாடெங்கும் விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் முன்னிலை சோஷலிஸக் கட்சி என்பவற்றால் இன்று ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகள் 11

## கொரோனா; இருவர் சாவு!



கொழும்பு, ஓக.9

நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித் துள்ளது. இந்த உயிரிழப்புக்கள் நேற்றுமுன்தினம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளன. 11

## திருக்கோணேஸ்வர ஆலயச் சூழலில் தொல்லியல் திணைக்களம் அடாத்து

### பெரும்பான்மையினருக்கு நிரந்தரக் கடைகள் அமைக்க முயற்சி

திருகோணமலை, ஓக.9

வரலாற்றுத் தொன்மைமிக்க திருக்கோணேஸ்வரர் ஆலயத் திருப்பணி வேலைகளைத் தடுத்து வரும் தொல்லியல் திணைக்களம், அங்கு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் நிரந்தரக் கடைகளை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளதுடன், அந்த நடவடிக்கைக்கு சம்மதிக்க வேண்டுமென ஆலயத்தினரை வற்புறுத்துகின்றது என்று 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காலிமுகத்திடலுக்கு

# மக்கள் இன்று வராவிடின் போராட்டம் கைவிடப்படும்

## போராட்டக்காரர்கள் அறிவிப்பு

**கொழும்பு, ஓக. 9**

**காலிமுகத்திடலில் இன்றையதினம் போராட்டமொன்றுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், இந்தப் போராட்டத்துக்கு மக்கள் வராவிட்டால் போராட்டம் கைவிடப்படும் என்று காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர்.**

போராட்டக் களத்தில் தங்கியுள்ள தம்ம சுஜாத தேரர் இன்றைய போராட்டம் தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ஓகஸ்ட் 9ஆம் நாள் (இன்று) நாங்கள் காலிமுகத்திடலில் முன்னெடுத்த போராட்டத்துக்குப் பயன் கிடைக்காவிட்டால் அதன் பின்னர் இங்கிருப்பதில் பயனில்லை.

எனவே நானும் இங்கு தங்கியிருக்கும் இதர போராட்டக்காரர்களும் இந்த இடத்தை விட்டு வெளியேறுவோம் என்று தேரர் மேலும் தெரிவித்தார்.

காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தும் போராட்டக்காரர்களை அங்கிருந்து வெளியேறும்படியும், ரணில் அரசாங்கத்தால் போராட்டத்துக்கு என்று ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லும்படியும் அரசாங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

கடந்த 5ஆம் திகதி மாலை 5 மணிக்குள் போராட்டக்காரர்கள் வெளியேற வேண்டும் என்றும் ரணில் அரசாங்கம் அறிவுறுத்தியிருந்தது. எனினும் போராட்டக்காரர்கள் அதை ஏற்க மறுத்தனர்.

இதையடுத்து அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டதுடன், எதிர்வரும் 10ஆம் திகதிவரை போராட்டக்காரர்கள் வெளியேறுவதற்கு தற்போது அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அதுவரை போராட்டக்காரர்களின் கூடாரங்களை அகற்றக்கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சீன எரிபொருள் நிறுவனம் இலங்கைக்குள் நுழைகிறதா?

கொழும்பு, ஓக. 9

சீனாவின் மிகப்பெரிய எரிபொருள் நிறுவனமான சினோபெக், எரிபொருள் இறக்குமதி, விநியோகம் மற்றும் பெற்றோலியப் பொருள்களை விற்பதற்காக இலங்கையின் சந்தையில் நுழைய வாய்ப்புள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் இருந்து அதிகமான நிறுவனங்களுக்கு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளை இலங்கையில் தொடங்குவதற்கும் அனுமதியளிக்கும் முன்மொழிவுக்கு அமைச்சரவை ஜூன் மாதம் ஒப்புதல் வழங்கியது.

தற்போது, இலங்கையின் எரிபொருள் விநியோகத்தில் 90 வீதமானவை அரசுக்கு சொந்தமான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊடாகவும், எஞ்சிய 10 வீதமானது லங்கா ஐ.ஓ.சி மூலமாகவும் வழங்கப்படுகிறது.

இந்த நிலையிலேயே மேற்படி சீன நிறுவனம் இலங்கைக்குள் ஊடுருவ வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது. (ம)

### சீனக் கப்பல் விவகாரம்

## இலங்கை அதிகாரிகளை சந்திக்க விரும்புகின்றதாம் சீனத் தூதரகம்!

கொழும்பு, ஓக. 9

சீனக் கப்பலின் வருகையைப் பிற்போடுமாறு இலங்கை வேண்டுகோள் விடுத்துள்ளதைத் தொடர்ந்து இலங்கை அதிகாரிகளைச் சந்திப்பதற்கான அவசர வேண்டுகோளை சீனத் தூதரகம் விடுத்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு 'யுவான் வாங் 5' என்ற சீனக் கப்பல் வரவுள்ள நிலையில், அதற்கு இந்தியா கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இதையடுத்து, கப்பலின் பயணத்தை பிற்போடுமாறு இலங்கை சீனாவுக்கு வேண்டுகோள் விடுத்தது.

இந்த நிலையிலேயே இலங்கையின் குறித்த அதிகாரிகள் சிலரைச் சந்திப்பதற்கான அனுமதியை சீனத் தூதரகம் கோரியுள்ளது. (ம)

## நாடெங்கிலும் மேலும் 50 ஐ.ஓ.சி. நிலையங்கள்

கொழும்பு, ஓக. 9

நாடெங்கிலும் மேலும் 50 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது என்று லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் கொழும்பு பங்குச் சந்தைக்கு அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 50 எரிபொருள் நிரப்பு நிலையங்களை ஆரம்பிப்பதற்கு எரிசக்தி அமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளதாக நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் மனோஜ் குப்தா தெரிவித்துள்ளார். (ம)

## ஜோசப் ஸ்டாலின் விடுதலை

கொழும்பு, ஓக. 9

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.



கடந்த மே 28ஆம் திகதி, நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் செய்ததை அடுத்து ஜோஸப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டார். அவருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 4ஆம் திகதி கோட்டை நீதிவானின் இல்லத்தில் பொலிஸார் அவரை முன்னிலைப் படுத்தினர். எதிர்வரும் 12ஆம் திகதி வரை ஜோசப் ஸ்டாலின் மறியலில் வைக்கப்பட்டார். எனினும், நகர்த்தல் பத்திரம் அணைக்கப்பட்டு இந்த வழக்கு நேற்று விசாரிக்கப்பட்டது. இதையடுத்தே ஸ்டாலின் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ம)

## ஒரு டொலர் 357 ரூபா!

கொழும்பு, ஓக. 9

டொலருக்கு நிகரான ரூபாவின் நிகர்ப் பெறுமதி 357.19 ரூபாவாக நேற்று நிர்ணயிக்கப்பட்டதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 357.19 ரூபாவாகவும் விற்பனை விலை 368.51 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (ம)



## ஸ்டாலினை விடுவிக்குமாறு யாழ். இந்துவில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 9

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முக்கியஸ்தரான ஜோசப் ஸ்டாலினின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர்களால் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'ஆசிரியர்களின் உரிமைகளுக்காக போராடும் ஜோசப் ஸ்டாலினை கைதுசெய்தமை வேதனை அளிக்கிறது', 'கைதுகளும் பயமுறுத்தல்களும் பிரச்சினைகளுக்குத் தீர்வல்ல' என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-20)

## ஸ்டாலினின் கைதைக் கண்டித்து வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து, வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நேற்று முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்ததாவது:-

ஜனநாயக ரீதியாக உரிமைக்காகப் போராடிய எமது பொதுச்செயலாளர் முறையற்ற விதத்திலே கைது செய்யப்பட்டுள்ளார். அதற்கு எமது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் இந்த அரசாங்கம் அவசரகாலச்சட்டத்தைப் பயன்படுத்தி ஜனநாயகப் போராளிகளை கைது செய்யும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. எனவே இந்தச்சட்டத்தை உடனடியாக நீக்கி நாட்டில் ஜனநாயகத் தன்மையை உறுதி செய்யவேண்டும். தேவையற்ற கைதுகளைத் தவிர்த்து நாட்டின் பொருளாதாரத்தை முன்னகர்த்த ரணில் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் -என்றனர். (ம-14-110)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஐ.நா.வில் ஒரு கத்திமுனை!

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்டக் குழுவொன்று அடுத்தமாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வு செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள பின்னணியில் மேற்படி அறிக்கையிடலுக்காக இந்தக் குழு இலங்கைக்கு வருகின்றது.

போருக்குப் பின்னர் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை கரிசனை கொண்டிருப்பதோ அல்லது கருத்து வெளியிடுவதோ இதுவொன்றும் முதல்முறையல்ல. எப்போதெல்லாம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வு இடம்பெறுகின்றதோ அப்போதெல்லாம் இந்த விவகாரம் பேசுபொருளாவது வழமைதான். ஆனால், காலிமுகத்திடலில் இடம்பெற்ற போராட்டங்கள் ஆயுதமுனைகளால் அடக்கப்பட்டமை, காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டமை, அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை மேற்கொண்ட தொழிற்சங்கத் தலைவர்கள் கைதுசெய்யப்படுகின்றமை, மனித உரிமைகளுக்கு முற்றிலும் விரோதப் போக்குடைய அவசரகாலச் சட்டம் நாட்டில் நடைமுறையில் உள்ளமை என்று ஒரு விதப் பதற்றநிலை நிகழ்காலத்தில் இலங்கையைச் சூழ்ந்திருக்கும் பின்னணியில், ஐ.நா. சிறப்புக் குழுவின் வருகை கொழும்பின் வயிற்றில் இம்முறை புளியைக் கரைக்கவே செய்யும்.

பொருளாதாரத்தில் முற்றிலும் சிதைந்து வீழ்ந்து கிடக்கும் இலங்கை, கொஞ்சமேனும் மேலெழுந்து நிலைத்து நிற்பதற்கு ஒரு சர்வதேசப் பிடிமானம் தற்போது தேவைப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்கள் அந்தப் பிடிமானமாக மாறுவதற்குரிய அனேக சாத்தியங்கள் தற்போதுவரை இருக்கின்றன. ஆனால், ஐக்கிய நாடுகள் சிறப்புக் குழுவின் அறிக்கை நாணய நிதியத்தின் தீர்மானத்தில் – ஒப்பந்தத்தில் கனதியான தாக்கத்தைச் செலுத்தும் என்பதில் இரண்டாவது கருத்தில்லை. அதைவிட, இலங்கைக்கு இருதரப்பு இராஜதந்திர உதவிகள் சீனா, இந்தியா என்ற இரு பிராந்திய வல்லரசுகளைத் தாண்டிய நாடுகளிடமும் இருந்து கிடைக்க வேண்டுமாயின், 'மனித உரிமைகளைப் பேணுதலும் நிலைப்படுத்தலும்' எழுதப்படாத விதி. ஆதலால், இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் அடுத்த மாதம் வழங்கப்படவுள்ள அறிக்கையிடல், இலங்கையின் தலைவிதியைப் பல இடங்களில் பல்வேறு வடிவங்களில் தீர்மானிக்கத்தான் போகின்றது.

எல்லாவற்றையும் விட, ஐ.நா. சிறப்புக் குழு அறிக்கையிட்டுத்தான் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் சர்வதேசத்துக்குத் தெரியவேண்டும் என்பதல்ல. அது தொடர்பான தெளிதலும் புரிதலும் சர்வதேசத்துக்கு இங்குள்ள தூதரகங்கள் வாயிலாகவும் சர்வதேச ஊடகங்கள் மூலமாகவும் மெய்ப்பிக்கப்பட்டதுதான். இன்னும் வெளிப்படையாகச் சொல்வதாயின், இலங்கையில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறலின் பாரதூரத்தன்மை என்ன என்பதைத்தான் இந்தக் குழு ஆராய – அறிக்கையிடப்போகின்றதே தவிர, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றனவா, இல்லையா என்பதையல்ல.

இந்த நாட்டை பொருண்மிய நலிவு நிலையில் இருந்தும் இதரபல பின்னடைவுகளில் இருந்தும் மீட்கும் அபிலாஷை ரணில் அரசாங்கத்துக்கு இருப்பது உண்மையெனில், பொருளாதார வேலைத்திட்டங்கள், சர்வகட்சி அரசாங்கத்துக்கான நகர்வுகளுக்கு இணைந்தாற்போல் மனித உரிமைகளை வலுப்படுத்தவும் உறுதிபூணவேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். ஆனால் கோத்தாபய அரசாங்கத்தைப் போன்று கண்துடைப்புக்காகவும் ஏமாற்று நாடகங்களுக்காகவும் இந்த நடவடிக்கைகளை ரணில் தரப்பு மேற்கொள்ளக் கூடாது. நகர்வுகள் ஆத்மார்த்தமாக இருக்கவேண்டும். அந்தச் சான்றிதழ்தான் தற்போது நாட்டுக்கும் தேவை; அரசாங்கத்துக்கும் தேவை.

### நாளொரு நல்வார்த்தை

"எதிர்மறை எண்ணங்களை அகற்றுங்கள். உங்களால் முடியாது என்று நினைத்தால் முடியாது. உங்கள் அவநம்பிக்கை வெற்றியைத் தடுத்துவிடும்" - புரூஸ் லீ




# கொரோனாத் தொற்று தீவிரமாகி வருகின்றது

## சுகாதார அமைச்சு மீண்டும் எச்சரிக்கை

**கொழும்பு, ஓக. 9**

**இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உட்படுபவர்களின் எண்ணிக்கை மீண்டும் கணிசமாக அதிகரித்துள்ளது. இதன்படி, தினசரி தொற்றுக்கு உட்படும் நபர்களின் எண்ணிக்கை சுமார் 200இனை நெருங்குகின்றது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**



நேற்று (நேற்றுமுன்தினம்) நாட்டில் மேலும் 184 பேர் கொரோனாத் தொற்றுடன் அவதானிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தொற்றாளர்கள் அனைவரும் இலங்கையில் இருந்து அடையாளம் காணப்பட்டவர்கள். அதன்படி, நாட்டில் பதிவான மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 6 லட்சத்து 66 ஆயிரத்து 764ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, மேலும் மூன்று கொரோனா இறப்புகள் நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, இலங்கையில் பதிவான கொரோனா இறப்புகளின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 586 ஆக அதிகரித்துள்ளது.

பொதுமக்கள் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து போதிய பாதுகாப்பு முன்னேற்பாடுகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும், சமூக இடைவெளிகளைச் சரிவரப் பேணுவதன் மூலமும், தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதுடன் சுகாதாரத்துறையின் அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிப்பதன் மூலமும் இந்தத் தொற்றில் இருந்து விடுபட்டுக்கொள்ளமுடியும் என்றும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## இலங்கையில்

# குரங்கம்மை நோயை அறியப் பரிசோதனை

கொழும்பு, ஓக. 9

இலங்கையில் குரங்கம்மை நோய் தொற்றுக்குள்ளானவர்கள் உள்ளனரா என்பதை கண்டறிய பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கான பரிசோதனைக் கருவிகள் உலக சுகாதார நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் கலாநிதி அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

பொரளை மருத்துவ பரிசோதனை நிறுவனம் மற்றும் கண்டி பொது மருத்துவமனையில் இது தொடர்பான பரிசோதனைகள் முதல்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குரங்கம்மை நோயால் இலங்கைக்குப் பாதிப்பு இல்லை என்று சுகாதாரத்துறை முன்னதாகத் தெரிவித்திருந்தது. எனினும், இலங்கையின் அயல்நாடான இந்தியாவிலும் இதர பல நாடுகளிலும் குரங்கம்மை நோயின் தாக்கம் தீவிரம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம)

நாளை 10.08.2022 புதன்கிழமை ஆடி 25
சுபநேரம் : 04.34 - 06.04
ராகுகாலம்: 12.04 - 01.34
பட்டினத்தடிகள் குருபூசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சி அரசாங்கத்துக்கான முன்மொழிவுகள் பகிரங்கமாகும்

## ஜனாதிபதி ரணில் உறுதி



**கொழும்பு, ஓக. 9**

**சர்வகட்சி அரசாங்கத்துக்காக அரசியல் கட்சிகளுடன் பல நாள்களாக இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஒவ்வொரு கட்சியும் முன்வைத்த முன்மொழிவுகள், கலந்துரையாடல்களில் பங்குபற்றிய அனைத்துக் கட்சிகளுக்கும் பொதுவாக வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் 11 கட்சிகளின் தலைவர்கள் மற்றும் சம்பிக்க ரணவக்க தலைமையிலான 43ஆவது படையணி ஆகியோருடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மற்றும் இன்னும் சில தமிழ் அரசியல் கட்சிகளுடன் மாத்திரமே சர்வகட்சி அரசாங்கம் குறித்த பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டியுள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மக்களின் அபிலாஷைகளுக்காக அரசியல் சித்தாந்தங்களை ஒதுக்கி வைத்துவிட்டு சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் அனைவரது ஆர்வத்தையும் பாராட்டினார். இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட சம்பிக்க ரணவக்க கருத்துத் தெரிவிக்கையில், 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மீளக் கொண்டுவருவது தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாட்டுடன் 43ஆவது படையணி நம்பிக்கையுடன் செயற்படுவதாகவும், அரச நிறுவனங்களுக்கு தலைவர்களை நியமிக்கும்போது அரசியல் கட்சி அமைப்பை மறந்து நிபுணத்துவம் வாய்ந்தவர்களை நியமிக்க வேண்டிய தேவை வலுவாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பிலான கலந்துரையாடலில் அனைத்து அரசியல் கட்சிகளின் தனித்துவமும் பாதுகாக்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, அடிப்படை ஆவணத்துடன் பேச்சை முன்னெடுப்பதன் மூலம் சர்வகட்சி அரசாங்கம் பற்றிய எதிர்பார்ப்புகளை அடைந்து கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (ம)

# அனைவரதும் ஆதரவுடன் விரைவில் நாட்டுக்கு மீட்சி

## ரணில் நம்பிக்கை

கொழும்பு, ஓக. 9

அனைத்துத் தரப்பினரின் ஆதரவையும் பெற்று நாட்டை இக்கட்டான சூழ்நிலையில் இருந்து மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கலாநிதி இத்தேபானே தம்மாலங்கார மகா நாயக்க தேரரை நேற்றுமுன்தினம் சந்தித்து ஆசி பெற்றபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றினால் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். அதனால்தான் தற்போது சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க முயற்சித்து வருகின்றேன் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இதன்போது, சர்வகட்சி ஆட்சிக்கு ஆதரவளிக்காத அரசியல்வாதிகளை மக்கள் நிராகரிக்க வேண்டும் என பேராசிரியர் கொட்டப்பிட்டியே ராகுல தேரர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம)

### பொதுநலவாய போட்டிக்காக

# பிரிட்டன் சென்றுள்ள பத்து வீரர்கள் ஓட்டம்

## தேடும் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 9

பொதுநலவாய போட்டிகளில் பங்கேற்பதற்காக பிரிட்டன் சென்றுள்ள இலங்கை அணியின் 10 வீரர்கள் அதிகாரிகளுக்கு அறிவிக்காமல் அணியை விட்டு வெளியேறியுள்ளனர் என்று ஏ.எப்.பி. செய்தி சேவை தெரிவித்துள்ளது.

அவர்களில் 3 பேர் கடந்த சில நாள்களுக்கு முன்பு காணாமல் போயிருந்தனர். ஜூடோ வீரர் மற்றும் பயிற்சியாளரின் இருப்பிடத்தை பொலிஸார் கண்டுபிடித்தாலும், அவர்களுக்கு 180 நாள்கள் நுழைவிசைவு இருந்ததால் அவர்கள் கைது செய்யப்படவில்லை.

இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் நெருக்கடி நிலை காரணமாக வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அவர்கள் அணியில் இருந்து வெளியேறியிருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். (ம)

# நாட்டைக் கட்டியெழுப்ப நாடாளுமன்ற குழுமுறை

## பொதுமக்கள் சந்திப்பில் சஜித் மீண்டும் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 9

நாட்டில் நிலவும் இக்கட்டான சூழலைப் புரிந்து கொண்டு அனைவரும் நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைய வேண்டும் எனவும், இதில் அமைச்சுப் பதவிகளை வகிக்காமல் நாடாளுமன்றக் குழு முறையின் ஊடாக கைகோர்த்து நாட்டைக் கட்டியெழுப்பத் தயார் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயக தார்மீகத்தை மறந்து நாகரிகமற்ற முறையில் முடிவுகளை எடுத்திருந்தால் இன்று நான் ஜனாதிபதியாகியிருக்க முடியும். ஆனால் நெறிமுறையற்ற ஜனாதிபதியாக ஆகாமல், மக்களின் விருப்பின்றி எந்தவொரு பதவிகளையும் பெறுவதற்கு நான் தயாரில்லை. இன்று மக்கள் மிகுந்த துக்கத்திலும் வேதனையிலும் உள்ளனர். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எத்தகைய வரிசைகளும் இருக்கவில்லை. மிகவும் கௌரவமாக நாம் வாழ்ந்தோம். ஆனால், பெரமுனவினரின் ஆட்சியால் இன்று உலகம் முழுவதும் தேடித்தேடி யாசகம் எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

தற்போதைய அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்து மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதொழித்து தொழிற்சங்கத் தலைவர்களை வேட்டையாடி வருகின்றது. அரச மிலேச்சத்தனத்தை நான் முற்றிலும் நிராகரிக்கின்றேன். இவ்வாறு செயற்பட்டால் நாட்டை மீட்க முடியாது -என்றார். (ம)

# சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஒருபோதும் ஆதரவில்லை!

## ஜே.வி.பி. திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 9

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க தமது கட்சி எவ்வித ஆதரவையும் வழங்காது என மக்கள் விடுதலை முன்னணி திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

ரணிலுக்கும், ஜே.வி.பி.யினருக்கும் இடையில் சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் இன்றையதினம் பேச்சு இடம்பெறவுள்ளது. இந்தப் பேச்சுத் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ள நிலையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் அனுரகுமார திஸாநாயக்க.

எனினும், ஜனாதிபதியின் அழைப்பின் பிரகாரம் நாட்டை மீட்பதற்கு சாதகமாக உள்ள ஏதுவழிகள் பற்றி தாம் கலந்துரையாடுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# சர்வகட்சி அரசாங்கம் அமைக்க முழுமையாக ஒத்துழையுங்கள்!

## அசாத் சாலி கோரிக்கை



ஜனாபதியின் கொள்கைப் பிரகடன உரையை வாழ்த்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் சகலரும் சர்வகட்சி அரசாங்கத்தைக் கொண்டு செல்வதற்கான ஒத்துழைப்புக்களை ஜனாதிபதிக்கு வழங்க வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும், மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி வேண்டுகோள் விடுத்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாணும் தீர்க்கதரிசனம் ஜனாதிபதியின் உரையிலுள்ளதாக சகல கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாழ்த்தியுள்ளனர். இதை, வாழ்த்தியுள்ள சஜித் பிரேமதாஸ, நடைமுறைக்குச் சாத்தியமானால் இது நல்ல திட்டமாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார். எனவே, இது நல்ல திட்டமாக அமைவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஒத்துழைக்க வேண்டும். காலிமுகத்திடலில் எவருக்கும் வேலையில்லை.

அவ்வாறு அரசியல் தேவைகள் இவர்களுக்கு இருந்தால், ஆர்ப்பாட்டம் செய்வதற்கு அரசாங்கம் ஒதுக்கியுள்ள இடங்களில்தான் ஆர்ப்பாட்டங்களை நடத்தவேண்டும். சுற்றுலாத்துறையினரைக் கவரும் பிரபல நட்சத்திர ஹோட்டல்களை வழிமறித்து ஆர்ப்பாட்டம் நடத்துவதை இனியும் அனுமதிக்க முடியாது.

நாட்டின் அந்நியச் செலாவணி வருவாய்க்கு முக்கிய பங்காற்றும் கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டல்களை சுற்றிவளைத்து ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதை பொது மக்கள் விரும்பவில்லை. வரிகளைத் தளர்த்தி, சந்தையை சுதந்திரமாக விடுவதுதான் அந்நியச் செலாவணியை உழைப்பதற்கான இலகு வழி. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆரின் திறந்த பொருளாதாரக் கொள்கையே இப்போது தேவைப்படுகிறது - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய பளுதூக்கல் போட்டியில்

## ஒரே நாளில் 3 சாதனைகள் தென்மராட்சி வீரன் அசத்தல்

யாழ்ப்பாணம், ஓக. 9

தேசிய ரீதியான பளுதூக்கல் போட்டியில் யாழ்ப்பாணம், தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒரே நாளில் மூன்று புதிய சாதனைகளைப் படைத்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி பண்டாரகம பகுதியில் நடைபெற்ற தேசிய பளுதூக்கல் போட்டியில் 25 மாவட்டங்களையும் சேர்ந்த 44 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து தென்மராட்சி சாவகச்சேரியைச் சேர்ந்த சற்குணராசா புசாந்தன் கலந்துகொண்டு மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டியில் மூன்றிலும் வென்று மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

120 கிலோவுக்கு மேற்பட்டோருக்கான பிரிவில் கலந்துகொண்ட இவர், ஸ்குவாட் பிரிவில் 330 கிலோகிராமையும், பென்ஞ் பிரஸ் பிரிவில் 175 கிலோகிராமையும், டெட்லிஃப்ட் பிரிவில் 261 கிலோகிராமையும் தூக்கி வெற்றி பெற்றுள்ளார். இதில் ஸ்குவாட் மற்றும் டெட்லிஃப்ட்பிரிவில் புதிய சாதனையையும் அவர் நிலைநாட்டி யுள்ளார். அத்துடன் குறித்த போட்டியில் மொத்தமாக 766 கிலோகிராமைத் தூக்கிப் புதிய சாதனையையும் படைத்துள்ளார்.

'முற்று முழுதாக என்னை என் கனவுகளுக்காக அர்ப்பணிக்கப் போகின்றேன். சர்வதேச ரீதியிலான வெற்றிக் கனவை நோக்கி நகரப் போகின்றேன்' - என்று புசாந்தன் தெரிவித்துள்ளார். (ம-22)

பிரதேச செயலரை அசௌகரியத்துக்கு உள்ளாக்கியமை

# பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக நேற்றுப் போராட்டம்

முல்லைத்தீவு, ஓக. 9

புதுக்குடியிருப்பு பிரதேச செயலரை திட்டமிட்டு அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டமை மற்றும் அவருக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தியமையைக் கண்டித்து, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எதிராக நேற்று வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.





புதுக்குடியிருப்பு பிரதேச செயலரான சி.ஜெயகாந்தின் அலுவலகமும் உத்தியோகபூர்வ விடுதியும் கடந்த 30 ஆம் திகதி மாலை 6.30 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரையான காலப்பகுதியில் முறையான தேடுதல் அனுமதியின்றி சோதனை செய்யப்பட்டது. அதன்போது அலுவலக தேவைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருள் அனுமதியின்றி புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் எடுத்துச்செல்லப்பட்டது. அந்த எரிபொருள் பிரதேச செயலகத்தினரால் பதுக்கி வைக்கப்பட்டது போனறும் தாம் பெரும்தொகை பெற்றோலை மீட்டது போன்றும் பொலிஸார் விடயத்தை மடைமாற்றம் செய்ய எத்தனித்தனர். பொலிஸாரின் இந்த அத்துமீறிய நடவடிக்கைகளைக் கண்டித்தே நேற்றையதினம் வடக்கின் பல பகுதிகளிலும் அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினர் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், குறித்த பொலிஸ் அதிகாரியின் தன்னிச்சையான செயற்பாட்டுக்கு எதிராக விசாரணையையும் கோரியுள்ளனர். (ம-14,27,9,110,159,125)

கொரோனாப் பெருந்தொற்று

## யாழ். போதனாவில் 6 பேருக்கு சிகிச்சை

யாழ்ப்பாணம், ஓக.9



யாழ். போதனா மருத்துவமனையில் கடந்த ஒரு வாரத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான ஆறு நோயாளிகள் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர் என யாழ். போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களில் சிலரில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே குறித்த நபர்கள் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர். இவர்கள் அனைவரும் ஏற்கனவே கொரோனாத் தடுப்பூசியை ஒரு வருடத்துக்கு முன்னர் பெற்றுக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ய)

## முகக்கவசம் அணிவது தற்போது காலத்தேவை

யாழ். போதனாவின் பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.9



பொதுமக்கள் கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாப்புப்பெற பொது இடங்களில் முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியைப் பேணுதல் அவசியமாகின்றது என யாழ். போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா அறிவித்துள்ளார்.

அத்துடன் கொரோனாப் பரவலை தடுப்பதற்கான தடுப்பூசியை கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள், 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்கள் சுகாதார வைத்திய அதிகாரிகளின் வழிகாட்டலில் பெற்றுக் கொள்ளல் அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ய)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** இழுபறியாக இருந்த முயற்சிகள் இன்று மதியத்துக்கு மேல் நிறைவேறும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை விலகும். எதிர்பார்த்த உதவி வந்து சேரும். தடைப்பட்ட வேலை முடியும்.

**இடபம்:** மதியத்துக்கு மேல் எதிர்பாராத பிரச்சினைகள் தோன்றும். புதிய முயற்சிகள் இன்று கைகொடுக்கா மல் போகும். உங்கள் திறமைக்கு சவாலான நாள்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு செயலில் முன்னேற்றம் காண்பீர்கள். வியாபாரத்தில் சூட்சுமங்கள் புலப்படும். இலாபத்துக்குரிய வழிகளைக் கண்டறிவீர்கள்.

**கடகம்:** பொருளாதாரத் தடைகள் விலகும். அரசு வழியிலான எதிர்பார்ப்பு நிறைவேறும். பணியிடத்தில் உங்களின் செல்வாக்கு உயரும். எதிர்பாராத வரவு உண்டு. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த ஆதாயம் உண்டு. தொழிலில் புதிய தொடர்புகள் கிடைக்கும். குடும்ப நிலையை உயர்த்த முயற்சி செய்வீர்கள். எதிர்பார்த்த வரவு உண்டு. பூர்வீக சொத்தில் இருந்த பிரச்சினை தீரும்.

**கன்னி:** தாய்வழி உறவினர்கள் வழியே ஆதாயம் அடைவீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பர். திடீர் பயணம் உண்டாகி அலைச்சல் ஏற்படும். [illegible] முயற்சி நிறைவேறும். மனக்குழப்பம் தீரும்.

**துலாம்:** குடும்பத்தினர் நலனில் அக்கறை கொள்வீர்கள். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். வியாபாரத்தை விருத்தி செய்வீர்கள். நிதி நிலையில் உயர்வு உண்டாகும்.

**விருச்சிகம்:** உங்களை விட்டு விலகிச் சென்ற உறவினர்கள் மீண்டும் தேடி வருவர். தம்பதி இடையே ஏற்பட்ட பிரச்சினை தீரும். எதிர்பார்த்த வருவாய் உண்டு. தடைபட்ட முயற்சி முடிவுக்கு வரும்.

**தனுசு:** உங்களது பிரச்சினைகளை மற்றவர்களிடம் கொண்டு செல்ல வேண்டாம். இன்று எந்த நிலையிலும் அமைதியை இழக்காதீர்கள். அதுவே நல்லது. உங்கள் வேலையில் மட்டும் கவனம் செலுத்துங்கள்.

**மகரம்:** செலவுகள் அதிகரிக்கும். கடன் கொடுத்தவர்கள் நெருக்கடியை ஏற்படுத்துவர். உங்கள் செயல்களை போராடி முடிக்க வேண்டியதாக இருக்கும்.

**கும்பம்:** உங்களின் தனித்தன்மையின் வழியே பிறரது விருப்பத்துக்கு ஆளாவீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர். பணியிடத்தில் உண்டான தொல்லைகள் விலகும்.

**மீனம்:** வியாபாரத்தில் உங்கள் அணுகுமுறை வெற்றியாகும். புதிய முயற்சியை மேற்கொள்வீர்கள். உங்களுடைய நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் தாக்குதல்களை எதிர்கொள்வதற்குத் தயார்

## தாய்வான் இராணுவம் அறிவிப்பு!



**தாய்பெய், ஓக. 9**

**சீனாவின் தாக்குதல்களை எதிர்கொள்வதற்குத் தாய்வான் தயாராகவே உள்ளது. தாய்வானின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் என்று கருதப்படும் பட்சத்தில் தக்க பதிலடியை தாய்வான் வழுங்கியே தீரும் என்று அந்த நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது.**

தாய்வானை சீனா ஆக்கிரமிக்கும் போக்குக்கு எதிராகவும் அந்த நடவடிக்கைகளுக்குத் தடைபோடும் விதமாகவும் அமெரிக்க நாடாளுமன்றத்தின் சபாநாயகர் நான்சி பெலோசி அண்மையில் தாய்வானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இந்தச் சுற்றுப் பயணம் சீனாவை கொதிநிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. இதையடுத்து தாய்வானின் எல்லைப் பகுதிகளில் சீனா போர்ப்பயிற்சியை நடத்தி வருகின்றது. இப்படியொரு பின்னணியிலேயே தாய்வானுக்கு சீனாவால் அச்சுறுத்தல் என்று கருதினால் பதிலடி கொடுக்கப்படும் என்று தாய்வான் இராணுவம் அறிவித்துள்ளது.

'நீண்ட தொலைவு பாயும் ஏவுகணைகள் மூலம் சீன இராணுவம் போர் ஒத்திகை நடத்தி வருகிறது. சீனாவின் ஒவ்வொரு நகர்வையும் மிகவும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம். நாங்கள் போரை விரும்பவில்லை. ஆனால், சீனா போர் தொடுத்தால், அதை எதிர்கொள்ள தயார் நிலையில் உள்ளோம்' என்று தாய்வான் இராணுவம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

# சீனாவைக் கட்டுப்படுத்த சர்வதேச உதவிதேவை

## உக்ரைனின் பாணியில் தாய்வானும் கோரிக்கை



தாய்பெய், ஓக. 9

தாய்வான் மீதான சீனாவின் அச்சுறுத்தல்களைச் சமாளிக்கும் வகையில், சர்வதேசம் தனது ஆதரவைத் தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது தாய்வான்.


ரஷ்யாவின் அத்துமீறலைச் சமாளிக்க சர்வதேசத்தின் ஆதரவை உக்ரைன் கோரிவரும் சமநேரத்தில் தாய்வான் சீனாவுக்கு எதிராக சர்வதேச உதவியை நாடியுள்ளது.

இது தொடர்பில் தாய்வானின் அதிபர் சாய் இங் வென் தெரிவித்ததாவது:-

தாய்வான் அரசும் இராணுவமும் சீனாவின் இராணுவப் பயிற்சிகள் மற்றும் போர் நடவடிக்கைகளை, நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றன. தேவையான பதிலடி நடவடிக்கைகளுக்கு தயாராக உள்ளன. தாய்வான் பிராந்தியத்தில் போர்ப் பதற்ற நிலைமை அதிகரிப்பதைத் தடுக்க சர்வதேச ஆதரவைகேட்டுக் கொள்கிறேன் - என்றார். (ம)

# அமெரிக்காவுடன் பேச்சுக்கள் ரத்து

## சீனா அறிவிப்பு



பீஜிங், ஓக. 9

தாய்வானில் அமெரிக்கா மேற்கொண்டுவரும் தலையீடுகளுக்குப் பதிலடியாக, அமெரிக்காவுடனான பேச்சுக்களைக் கைவிடுவதாக சீனா அறிவித்துள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பாக அமெரிக்கா - சீனா இடையில் நடைபெறவிருந்த இருதரப்புச் சந்திப்பையும், பாதுகாப்புத் தொடர்பான அமெரிக்க - சீன இராணுவ அதிகாரிகளுக்கு இடையில் நடைபெறவிருந்த சந்திப்பையும் கைவிடுவதாக சீனா அறிவித்துள்ளது.

அமெரிக்கா - சீனா இடையிலான பருவநிலை மாற்றம் தொடர்பான சந்திப்பு உலக அளவில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. தீவு நாடுகளின் இருப்பு இந்தச் சந்திப்பில் தங்கியுள்ளதாக சர்வதேச அவதானிகள் பலரும் சுட்டிக்காட்டினார்கள். இந்த நிலையில், குறித்த சந்திப்புக்கள் மற்றும் கலந்துரையாடல்கள் கைவிடப்பட்டமை பெரும் பின்னடைவு என்று கருதப்படுகின்றது. (ம)



# காஸா முனையில் இஸ்ரேல் தாக்குதல்

## அமைதியை நிலைநாட்ட எகிப்து கடும் முனைப்பு

டெல்அவிவ், ஓக. 9

காசா முனையில் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் போராளிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்று வருகின்றது. எகிப்து இரு தரப்பினருக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

கடந்த ஒருவாரகாலமாக இடம்பெற்ற இந்தப் போர் நேற்றுமுன்தினம் உச்சம் தொட்டது. இஸ்ரேலின் தாக்குதல்களில் ஹமாஸின் தளபதியொருவர் உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாக ஹமாஸ் தனது தாக்குதலை தீவிரப்படுத்தியது. எனினும், ஏவுகணைத் தடுப்பு அமைப்புகள் மூலம் ஹமாஸின் ஏவுகணைகளில் பலவற்றை இஸ்ரேல் தடுத்தழித்துள்ளது.

காஸா முனை, மேற்குக் கரை போன்ற பகுதிகளில் இருந்து இஸ்ரேல் வெளியேறவேண்டும் என்று ஹமாஸ் அமைப்பு தொடர்ந்து வலியுறுத்தி வருவதுடன், ஜெருசலேம் நகரை இஸ்ரேலிடம் இருந்து கைப்பற்றியே தீருவோம் என்பது அந்த அமைப்பின் கொள்கையாக உள்ளது. இதனால் இரு தரப்புக்கும் இடையில் நீண்டகாலமாக அவ்வப்போது போர் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தாய்வானும் போர்ப்பயிற்சி



தாய்பெய், ஓக. 9

சீனா இராணுவம் தாய்வானைச் சுற்றிவளைத்துப் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டுவரும் நிலையில், சீனாவுக்குப் போட்டியாக தாய்வானும் நேற்றுத் தீவிர போர்ப் பயிற்சிகளை நடத்தியது.

தாய்வானின் தரைப்படை, கடற்படை, விமானப்படை என்று அனைத்துத் துறையும் இந்தப் போர்ப்பயிற்சியில் தம்மைத் தீவிரமாக ஈடுபடுத்தின. நேற்றுமுன்தினம் தொடக்கம் நேற்றுப் பின்னிரவு வரை சுமார் 14 மணிநேரம் தாய்வான் இராணுவம் பயிற்சியில் ஈடுபட்டது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

# பொதுவெளியில் இருப்பது புடின் அல்லர்: அவரைப்போலுள்ள இன்னொருவரே அது

## உக்ரைன் குற்றச்சாட்டு



மொஸ்கோ, ஓக. 9

நாம் பொதுவெளியில் காண்பதும், ரஷ்யாவின் சார்பாக பல தரப்பினருடன் பேசுவதும் சந்திப்புக்களில் கலந்துகொள்வதும் புடின் அல்ல. புடினைப் போன்றுள்ள இன்னொருவரே அது. புடின் தற்போது தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று உக்ரைன் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து உக்ரைனின் உளவுப் பிரிவின் தலைவரான மேஜர் ஜெனரல் கைரிலோ புடானோவ் தெரிவித்ததாவது:-

ரஷ்ய அதிபர் புடின் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார். இதன்பொருட்டு அவர் பொதுவெளியில் நடமாடாமல் இருப்பதற்காகத் தன்னைப் போன்ற தோற்றம் கொண்ட மற்றொரு நபரைப் பயன்படுத்துகிறார். இதற்குச் சான்றாக புடினின் சமீபத்திய ஒளிப்படங்களில் அவரது காதுகளின் நீளம் மாறுபட்டுள்ளதைக் காணலாம் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண மீனவர்களுக்கு தமிழகத்திலிருந்து ம.எண்ணெய்

## இந்தியத் தூதரகத்திடம் மீனவர்கள் கோரிக்கை பணம் செலுத்தத் தயார் என்றும் அறிவித்தனர்




**யாழ்ப்பாணம், ஓக. 9**

**வடக்குமாகாண மீனவர்களுக்குத் தேவையான மண்ணெண்ணெயை இந்தியத் தூதரகம், தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்து வழங்கவேண்டும். அதற்கான பணத்தை இலங்கை ரூபாவில் வழங்கத் தயாராகவுள்ளோம் என்று யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனத்தலைவர் அ.அன்னராசா கோரிக்கை விடுத்துள்ளார்.**

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ். மாவட்டத்தை பொறுத்தவரை 23 ஆயிரம் மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. கடந்த 60 நாள்களுக்கு மேலாக மீனவர்களுக்குரிய மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. நூற்றுக்கு எண்பது வீதமான கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்லவில்லை. மண்ணெண்ணெய் இன்று கிடைக்கும் நாளை கிடைக்கும் என்று ஏக்கத்தோடு இரண்டு மாதங்களை கடந்து விட்டோம். ஆனால் இன்று வரை மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. எங்கள் சமூகம் பட்டினியை நோக்கி நகர்கின்றது. இதனை யாரும் கண்டு கொள்ளவில்லை.

எரிபொருள் தட்டுப்பாடு தற்போது நிவர்த்தி செய்யப்படுவதாகக் கூறப்பட்டாலும் மீனவர்களுக்குத் தேவையான மண்ணெண்ணெய் இன்றுவரைகிடைக்கவில்லை. கடந்த வாரம் 6 ஆயிரத்து 600 லீற்றர் மண்ணெண்ணெய் யாழ்.மாவட்ட மீனவர்களுக்குக் கிடைத்திருக்கின்றது. இதை 6 மீனவ சங்கங்களுக்குப் பகிர்ந்தளித்திருக்கின்றோம். நூற்றுக்கணக்கான சங்கங்கள் எரிபொருளின்மையால் தொழிலின்றி வாழ்வாதாரத்தை இழந்துள்ளன. ஜனாதிபதி, எரிசக்தி அமைச்சர், கடற்றொழில் அமைச்சர் ஆகியோர் இணைந்து மீனவர்களுக்கு மண்ணெண்ணெயை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நாங்கள் யாரிடமும் நிவாரணம் கேட்கவில்லை, உதவி கேட்கவில்லை. மண்ணெண்ணெய் வழங்கினால் மட்டும் போதும். அதற்கான பணத்தை கடற்றொழில் சமூகம் வழங்கும். அத்துடன் இலங்கைக்கான இந்தியத் தூதர் கோபால் பாக்லேயிடமும் யாழ். இந்தியத் துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனிடமும் நான் ஒரு பகிரங்கக் கோரிக்கையை விடுக்கின்றேன்.

வடக்கு மாகாண மீனவர்களுக்குத் தேவையான மண்ணெண்ணெயை தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான பணத்தை நாம் இலங்கை ரூபாவில் வழங்கத் தயாராகவுள்ளோம் - என்றார். (ம-14,20)

# கசிப்புடன் மூதாட்டி கைது!

யாழ்ப்பாணம், ஓக. 9

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் மத்திப் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூதாட்டி ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

சுழிபுரம் பகுதியில் விசேட கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய மூதாட்டி ஒருவரை சுழிபுரம் மத்தி பேச்சியம்மன் கோவிலடியில் வழிமறித்து சோதனையிட்டனர். அதன்போது அவரிடமிருந்து ஒரு லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது. அதனையடுத்து கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 65 வயதான அந்த மூதாட்டி கைது செய்யப்பட்டார். மூதாட்டிக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-14,125)

# ஹெரோய்னுடன் யுவதி கைது!

யாழ்ப்பாணம், ஓக. 9

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவாந்துறைப் பகுதியில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யுவதி ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டார் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாவாந்துறைப் பகுதியில் யுவதியொருவர் ஹெரோய்னை வைத்திருப்பதாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில், குறித்த பகுதிக்கு விரைந்த யாழ்ப்பாணப் பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கைகளை அடுத்தே 19 வயதான மேற்படி யுவதி கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 40 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது. அதனையடுத்து யுவதிக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று யாழ்ப்பாணப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-14,125)

# ஹெரோய்னுடன் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 9

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹெரோய்னுடன் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நகர்ப் பகுதியில் யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்ட சிறப்புச் சோதனை நடவடிக்கைகளின்போது 40 மில்லிகிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மன்னார்ப் பகுதியைச் சேர்ந்த 35 வயதான மேற்படிநபர் கைது செய்யப்பட்டார். அதனையடுத்து இளைஞருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ம-14,125)

## எரிபொருள் வரிசையில் நிறுத்தப்பட்ட

# மோ.சைக்கிளின் தாங்கிக்குள் மணல் கொட்டிய விஷமிகள்!

## உதிரிப்பாகங்கள் பழுது

யாழ்ப்பாணம், ஓக. 9

எரிபொருள் வரிசையில் நிறுத்திவிடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றின் கொள்கலனுக்குள் மணலைக் கொட்டியதால், குறித்த மோட்டார் சைக்கிளின் உதிரிப்பாகங்கள் பழுதடைந்த சம்பவம் யாழில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் பதிவாகியுள்ளது.

மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் கடந்த சனிக்கிழமை வரிசையில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வீட்டுக்குச் சென்றுள்ளார். நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை எரிபொருள் விநியோகிக்கும் போது எரிபொருள் நிலையத்துக்கு வந்து வரிசையில் நின்று எரிபொருளைப் பெற்றுள்ளார். அதன்பின்னர் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது மோட்டார் சைக்கிளின் இயந்திர சத்தத்தில் வித்தியாசம் காணப்பட்டுள்ளது. அதனையடுத்து மோட்டார் சைக்கிளை, மோட்டார் சைக்கிள் திருத்தகத்துக்குக் கொண்டுசென்று சோதனை செய்தபோது மணல் கொட்டப்பட்டிருப்பது தெரியவந்தது.

எரிபொருளைப் பெறுவதற்காக நிறுத்தப்படும் மோட்டார் சைக்கிள்களின் உதிரிப்பாகங்கள் திருடப்படும் சம்பவங்கள் வடக்கு மாகாணத்தின் பல இடங்களில் முன்னதாகப் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-14,27)

# மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு கொழும்பிலிருந்து ம.எண்ணெய்!

## மன். மீனவ கூட்டுறவு சமாசம் முயற்சி

மன்னார், ஓக. 9

எரிபொருள் இல்லாமல் மீன்பிடித்துறை முடங்கிப் போயுள்ள நிலையில், மன்னார் மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு கொழும்பு - கொலனாவிலிருந்து மண்ணெண்ணெய் பெற்றுக்கொடுக்க மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சமாசம் தீர்மானம் எடுத்துள்ளது. மன்னார் மாவட்டத்துக்கு கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக மண்ணெண்ணெய் வராமையால் மீனவ மற்றும் உப உணவு உற்பத்தியில் ஈடுபடும் குடும்பங்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்றன.

இந்த நிலையில் ஓரிரு தினங்களுக்கு முன்பு மாந்தை எரிபொருள் நிலையத்துக்கு 6 ஆயிரத்து 500 லீற்றர் மண்ணெண்ணெய் வந்ததாகவும் மன்னார் மாவட்டத்தில் 20 க்கும் மேற்பட்ட மீனவ சங்கங்கள் இருக்கின்றபோதும் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட 4 மீனவ சங்கங்களுக்கு மட்டுமே பகிர்ந்து கொடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்கையில் கொழும்பு - கொலனாவையில் வியாபார நடவடிக்கைகளுக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 464 ரூபாவுக்கு வழங்கப்படும் என்பதால் அதனை மீனவர்களுக்கு பெற்றுத்தர வாய்ப்பு இருப்பதாக மன்னார் மாவட்டச்செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல், மன்னார் மீனவ கூட்டுறவு சமாசம், கிராமிய மீனவ அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோரிடம் அண்மையில் தெரிவித்துள்ளார் என்று தெரியவருகின்றது.

இது தொடர்பாக மீனவ கூட்டுறவு சமாசம் மற்றும் கிராமிய மீனவ அமைப்புக்கள், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகங்களை அழைத்து அவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டுள்ளனர். அவர்களின் பரிந்துரைகள் மற்றும் அபிப்பிராயங்களுக்கு அமைவாக அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-14,60)

# தும்பு உற்பத்தி ஆலையில் தீ விபத்து

பளைஇத்தாவிலில் உள்ள தும்பு உற்பத்தி ஆலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தீ விபத்தில், பெருமளவான தும்பு தீயில் எரிந்து சாம்பராகியது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை என்பதால் தும்பு உற்பத்தி ஆலை மூடப்பட்டிருந்தது. திடீரென அந்தப்பகுதி புகைமண்டலமாகக் காணப்பட்டதையடுத்து விரைந்து செயற்பட்ட மக்களும் இராணுவத்தினரும் [illegible] அங்கு குவிக்கப்பட்டிருந்த பெருமளவு தும்பு எரிந்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-14,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் போஷாக்கு தொடர்பில் பெற்றோர் கவனமெடுக்கவேண்டும்!

## கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓக. 9**

**நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் சிறுவர்களின் போஷாக்குத் தொடர்பில் பெற்றோர் கவனமெடுக்கவேண்டும் என்று கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் சுதாகரன் தெரிவித்துள்ளார்.**

சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளியின் வருடாந்த விளை யாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக உணவுப் பொருள்கள் உள்ளிட்ட பல பொருள் களின் விலை உயர்வு தவிர்க்க முடி யாத ஒன்றாக அதிகரித்துச் செல்கின்றது. இந்த நெருக்கடியான நிலையை எதிர்கொண்டு பெற்றோர் தங்களுடைய சிறுபிள்ளை களின் ஊட்டச்சத்தில் கவனம் செலுத்த வேண்டும்.



குறிப்பாக முன்பள்ளியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சத்துணவுகள் பரிமாறப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகிறது. எனவே இந்த நெருக்கடியான நிலையை எதிர்கொண்டு முட்டை, பால், இலை வகைகள், பழங்கள் போன்ற போஷாக்கு உணவுகளைக் கொடுத்து பிள்ளைகளின் போஷாக்கை மேம்படுத்துவதற்கும் அவர்களுடைய ஆரோக்கியத்தைத் திடப்படுத்துவதற்கும் பெற்றோர் செயற்படவேண்டும் - என்றார்.

(ம-14,125)

# 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி சங்கீதா பிரதீபன்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி யோகநாதன் நாகபூசணி**



அவர்கள் 10.07.2022 அன்று இறைபதமடைந்துள்ளார் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ இளவாலை கன்னியர் மடம் ம.வி. இளவாலை

(CR 37026) (3/6)

# யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)

# கேள்வி அறிவித்தல்

## இல. 373, பிரதான வீதியிலுள்ள கட்டடம் திருத்தத்திற்கான கூறுவிலை கோரல் விளம்பரம்

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள கட்டடத்தினைத் திருத்தம் செய்வதற்கான அங்கீகரிக்கப்பட்ட கட்டட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கூறு விலைகள் கோரப்படுகின்றது. கட்டடத்திருத்தம் தொடர்பான விபரத்தினை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டடத்தினைப் பார்வையிட விரும்புவோர் மற்றும் ஏனைய விபரங்களை சங்க தலைமைக் காரியாலயத்தில் நேரிலோ அல்லது தொலைபேசி இலக்கத்துடன் (021 222 2587) அலுவலக நேரத்தில் திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் 1.30 மணி வரையிலும் தொடர்பு கொண்டு பார்வையிட முடியும்.

**விண்ணப்ப முடிவு திகதி : 20.08.2022**

**விண்ணப்பிக்கும் முறை :**

மேற்படி கூறுவிலைக்கான விண்ணப்பப்படிவத்தினை சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் ரூபா 1000.00 இணை செலுத்திப் பெற்று, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"இல. 373, பிரதான வீதியில் உள்ள கட்டடம் திருத்தம் செய்வதற்கான கூறுவிலை"** எனக் குறிப்பிட்டு **தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வது, இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு **2022.08.22**ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்**
**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

(CR 37007) (3/6)

# கியூ.ஆருக்கு எரிபொருள் பெற பொதுமக்கள் நேற்று ஆர்வம்!

யாழ்ப்பாணம், ஓக. 9

கியூ.ஆர். முறைக்கு எரிபொருள் பெறுவதற்கு பொதுமக்கள் பலரும் நேற்று ஆர்வம் காட்டினார்கள்.

வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டைப் பலரும் பயன்படுத்தி முடித்துவிட்டதால் வார இறுதி நாள்களான கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன. இந்த நிலையில் இந்த வாரத்துக்கான எரிபொருளைப் பெறுவதற்காக பொதுமக்கள் நேற்றையதினம் ஆர்வம் காட்டினார்கள். எனினும், முன்னரைப் போன்று மிகநீண்ட வரிசைகளை எங்கும் காணக்கிடைக்கவில்லை. சுமுகமான முறையிலேயே எரி பொருள் விநியோகம் இடம்பெற்றது. (ம-17)

### கொரோனாப் பெருந்தொற்று

# தடுப்பூசி தொடர்பான வாராந்தத் தரவு தருக

## ஆளுநர் பணிப்புரை

யாழ்ப்பாணம், ஓக. 9

வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தடுப்பூசிகளை வழங்கும்போது வாராந்தத் தரவுகளை தனக்கு அனுப்புமாறு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சம்பந்தப்பட்ட சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டில் தற்போது கொரோனாவின் தாக்கம் மீண்டும் அதிகரித்துள்ள நிலையில், தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்கள் தமது பிரிவுகளில் உள்ள சுகாதாரத் தரப்பினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே கொரோ னாத் தடுப்பூசிகள் தொடர்பான வாராந்தத் தரவுகளைக் கோரியுள்ளார் ஆளுநர். (ம-27)

# கேள்வி அறிவித்தல்.

## வலிகாமம் வடக்குபிரதேச சபை,காங்கேசன்துறை

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரசுக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காகக் கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டிக்கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், வேண்டிய தரத்தினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் வடக்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி இல 021224 1130) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை எனும் இடத்திலிருந்து 09.08.2022ம்திகதியிலிருந்து 22.08.2022ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப் படாத கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
06. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 22.08.2022 திகதி பி.ப 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு,வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்குபதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
08. கோரப்பட்ட வேலைக்கான கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 30 (முப்பது) (22.08.2022) நாட்களாகும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையும், கோரப்படும் காலமும் கீழே அட்டவணையில் காட்டப்படுகிறது.

**அட்டவணை I**

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | வேண்டப்படும் தகைமை | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கக் கூடிய பிணை வைப்பு | கோரப்படும் செல்லுபடிக் காலம் |
| 01 | Desktop Computer Set With UPS-05Nos | வியாபாரப் பதிவு | 30 நாட்கள் | 2,000.00 | 25,000.00 | 22.09.2022 |

சோ.சுகிர்தன்
தலைவர்,

(CR 37009) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்- சைக்கிள் விபத்தில் நபரொருவர் உயிரிழப்பு!

## இளைஞர் காயம்

கார் - சைக்கிள் விபத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் அவருடன் பயணித்த இளைஞரொருவரும் காயமடைந்துள்ளார் என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள வீதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு இடம்பெற்றது.

குறித்த வீதியால் சென்றுகொண்டிருந்த சைக்கிளை அதே பகுதியில் வந்த கார் ஒன்று மோதிவிட்டு தப்பிச்சென்றுள்ளது.

விபத்தில் தென்மராட்சியைச் சேர்ந்த க.நிஷாந்தன் (வயது - 26) என்ற நபரே உயிரிழந்தவராவார். உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் விபத்தில் உயிரிழந்த நபருடன் பயணித்த தி.பார்த்திபன் (வயது - 24) என்ற இளைஞர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14,9,159)

# மரண அறிவித்தல்

## பேரம்பலம் ஞானசேகரம்



ஏழாலையை பிறப்பிடமாகவும் மண்டைதீவை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் ஞானசேகரம் அவர்கள் 08.08.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் ஆசைப்பிள்ளை பூபதி தம்பதியரின் அன்பு மருமகனும் சிறிகாந்தராணியின் அன்புக் கணவரும் கனிஸ்ரா, விதுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காந்தன். கஜந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் லது, றதுஷா, சர்விஸ், யகிஷன் ஆகியோரின் பேரனும் வசந்தா, மல்லிகா, ஞானராசா, உதயம், மலர், றஞ்சினி ஆகியோரின் அன்புச்சகோதரனும் தேவராஜா, காந்தி, ராணி, திலகன், திரு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2022) செவ்வாய்க்கிழமை ந.ப. 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு தலைகீரி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 157 7926**
**076 280 4989**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



பிறப்பு 12 . 06 . 1943

இறப்பு 08 . 08 . 2022

## திரு.மாணிக்கம் ஞானமாணிக்கம்

யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடியை பிறப்பிடமாகவும் கலட்டி முந்தல் லேன், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.மாணிக்கம் ஞானமாணிக்கம் அவர்கள் நேற்று (08.08.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் மாரிமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற இராசதுரை கணேஸ்வரி (தங்கமணி) தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற விநோதினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுபவிந்தா மற்றும் சுபித்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் அஷ்மித்தாவின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2022) செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 12.30 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சுபித்தா - மகள்**


# மரண அறிவித்தல்

## சிவக்கொழுந்து துரைராசா

யாழ்.கொம்மந்தறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து துரைராசா கடந்த (07.08.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து, செல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற குழந்தைவேலு, பூமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலறஞ்சிதம் (சுசீலா) அவர்களின் பாசமிகு கணவரும், சுகர்ணா(கனடா), துஷ்யந்தி (ஜேர்மனி), றோஜனா(இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கண்ணன்(கனடா), முகுந்தன்(ஜேர்மனி), திலீபன்(இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஷாமலி, கேதாரன், மானஷா, ஞானஷி, கஜலோன், வரோதயன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, மகேஸ்வரி, செல்வ மாணிக்கம், பத்மாவதி மற்றும் நற்குணம், ராசபூபதி, கௌசலாதேவி, கஜேந்திரராணி, ராஜசுலோசனா, விஜயராணி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தங்கேஸ்வரன், கெங்கேஸ்வரராஜா(கனடா), புவனேஸ்வரன்(கனடா), காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், பொன்னம்மா, தெய்வேந்திரம், செல்வானந்தம், செல்லையா, தம்பிராஜா மற்றும் செல்லம்மா, இந்திராணி, சர்வானந்தம், துரைராஜா, ராஜேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (10.08.2022) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் கொம்மந்தறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் மயிலியதனை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்



பிறப்பு 16.12.1944

இறப்பு 07.08.2022

**கொம்மந்தறை,**
**வல்வெட்டித்துறை.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**076 546 7631**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வர திருத்தலத்தை பாதுகாக்க முன்வரவேண்டும்!

## ஆறு. திருமுருகன் அவசர வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், ஓக.9**

**சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சைவத் திருக்கோயிலான திருக்கோணேஸ்வர திருத்தலத்தைப் பாதுகாக்க அனைவரும் முன்வரவேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்குச் செல்லும் வழியில் 2008ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவசர அவசரமாக வீதியின் இரு மருங்கும் இரத்தினபுரியைச் சேர்ந்த பெரும்பான்மையினருக்குத் தற்காலிகக் கடைகள் வழங்கப்பட்டன. அந்தக் கடைகள் தற்போது 58 கடைகளாக அதிகரித்துள்ளன. திட்டமிட்டு ஆலயச் சூழலை ஆக்கிரமிப்பது போன்று இந்தக் கடைகள் அமைக்கப்பட்டன. இது தொடர்பாக ஆலய நிர்வாகம் பல இடங்களில் முறைப்பாடு செய்தும் பயன் ஏதும் இல்லை.

தற்போது இந்தக் கடைகளைத் தொல்லியல் திணைக்களம் நிரந்தரக் கடைகளாக அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது. தொல்லியல் இடமெனக் கூறி ஆலயத்தின் திருப்பணிகளுக்குத் தடைகளை ஏற்படுத்தி வரும் தொல்லியல் திணைக்களம், பெரும்பான்மையினருக்கு நிரந்தரக் கடைகளை அமைக்க அனுமதி கொடுத்துள்ளது.

இந்த விடயத்தைக் கருத்திற் கொண்டு அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் திருக்கோணேஸ்வர ஆலய திருப்பணிகள் நடைபெறுவதற்கும், அங்கு அவசர அவசரமாகக் கட்டப்படவுள்ள கடைக்கட்டுமானங்களைத் தடுத்து நிறுவத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திருக்கோணேஸ்வரர் ஆலயச் சுற்றாடலில் வேற்றுமதக் கட்டட நிர்மாணப் பணிகள் சுதந்திரமாக நடைபெறுகின்றது. திருக்கோணேஸ்வரர் ஆலய திருப்பணிகளில் மட்டும் தொல்லியல் திணைக்களம் தலையீடு செய்து தடைகளை ஏற்படுத்தி வருகின்றது.

இது தொடர்பாக பிரதமரும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உடன் அக்கறை செலுத்த வேண்டும்- என்றுள்ளது. (எ-இ)

# பட்டா வாகனம் மோதி இளைஞன் படுகாயம்!

## சித்தன்கேணியில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஓக. 9

பட்டா ரக வாகனம் மோதி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் நேற்றுக்காலை இடம்பெற்றது. சித்தன்கேணியில் இருந்து வட்டுக்கோட்டை நோக்கிச் சென்ற பட்டா வாகனம் கட்டுப்பாட்டையிழந்து வீதியோரத்திலிருந்த வீட்டின் அருகே பாய்ந்து வீட்டுப் படலையைத் திறந்து வெளியேவர முற்பட்ட இளைஞர் ஒருவரை மோதித்தள்ளியது.

விபத்தில், இளைஞன் இரு கால்களிலும் படுகாயமடைந்த நிலையில் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அத்துடன் இளைஞரின் மோட்டார் சைக்கிளும் முற்றாக சேதமடைந்துள்ளது. அதனையடுத்து விபத்தை ஏற்படுத்திய பட்டா வாகனத்தின் சாரதியைக் கைது செய்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-14,27)


**மணமகன் தேவை**

1990 ஆம் ஆண்டு பிறந்த மூலநட்சத்திரம் விவாகரத்தான மணமகளுக்கு மணமகன் தேவை. ஐரோப்பிய நாடுகள் விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை. (CS45884) (3/6)

தொடர்புகளுக்கு: 074 306 5931


## கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நுணாவில் ஐ.ஓ.சியில் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக.9

நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஜே/288 முதல் ஜே/310 வரையுள்ள கிராம அலுவலர் பிரிவுகளுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கியூ ஆர் கோட் அடிப்படையில் விநியோகம் இடம் பெறவுள்ளது என்றும், எரிபொருள் நிரப்ப வருவோர் கிராம அலுவலர் பிரிவை உறுதிப்படுத்தும் ஆவணங்களைத் தம்வசம் வைத்திருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே/288-289 காலை 9 முதல் 10.00 மணி, ஜே/290-291 மு.ப.10 மணி முதல் மு.ப.10.30 மணி, ஜே/292-293 மு.ப.10.30 மணி முதல் மு.ப.11, ஜே/294-295 மு.ப. 11 மணி 11.30 மணி, ஜே/296-297 மு.ப. 11.30 மணி முதல் நண்பகல் 12 மணி, ஜே/298-299 நண்பகல்12 மணி முதல் பி.ப. 12.30 மணி, ஜே/300-301 பி.ப. 12.30 மணி முதல் பி.ப. ஒரு மணி, ஜே/302-303 பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 2 மணி, ஜே/304-305 பி.ப. 2 மணி முதல் பி.ப. 3 மணி, ஜே/306-307 பி.ப. 3 மணி முதல் பி.ப. 3.45 மணி, ஜே/308-309 பி.ப. 3.45 மணி முதல் மாலை. 4.15 மணி, ஜே/310 மாலை. 4.15 மணி முதல் மாலை. 4.30 மணி. (எ-159)

## சவுக்கு மரம் வெட்டியோர் கைது



யாழ்ப்பாணம், ஓக.9

வடமராட்சி கிழக்கு, மணற் காட்டில் நீண்டகாலமாக சட்டவிரோதமாக சவுக்கு மரம் வெட்டி விற்பனை செய்த குற்றச்சாட்டில் 12 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீண்டகாலமாக சவுக்கு மரங்கள் விறகுக்காக வெட்டப்படுவது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து எடுக்கப்பட்ட நடவடிக்கையிலேயே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்கள் இன்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-27)

# மோட்டர் திருட்டு நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஓக.9

தெல்லிப்பழை, கட்டுவன் பகுதியில் நீர் இறைக்கும் மோட்டர்களைத் திருடிய குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 7 நீர் இறைக்கும் மோட்டர்கள் மற்றும் இரு நீர் பம்பிகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




தேசிய ரீதியான பளுதூக்கல் போட்டியில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவனும் பழையமாணவர் ஆசிரியர் சங்க பொருளாளருமான

**ச.புசாந்தன்**

அவர்கள் 120 Kg மேற்பட்டவர்களுக்கான பிரிவில்

**Squat பிரிவில் 350 kg**

**Bench Press பிரிவில் 175 kg**

**Dead lift பிரிவில் 261 kg**

ஆகிய பிரிவுகளில் தங்கப் பதக்கத்தினைப் பெற்று அத்துடன் குறித்த போட்டியில் மொத்தமாக 786 kg ஐ தூக்கி புதிய சாதனையைப் படைத்துள்ளார். இவரை எமது பாடசாலை சமூகம் சார்பாக மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :

**யா/ டிறிபேக்கல்லூரி**
**ப.மா.ஆ.சங்கம்**
**சாவகச்சேரி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு, கோடாவுடன் இருவர் கைதாகினர்!

புதுக்குடியிருப்பு - தேவிபுரம் பகுதியில் கசிப்பு, கோடாவுடன் இருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேவிபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையிலேயே கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 55 லீற்றர் கசிப்பு, 375 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அத்துடன் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரிடமிருந்து 20 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும் மீட்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட இருவரில் ஒருவர் ஏற்கனவே நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்த குற்றவாளி என்று தெரிவித்த புதுக்குடியிருப்புப் பொலிஸார், குறித்த இருவரையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். (ம-14,19)



## கப்பல்...

சீன ஆய்வுக் கப்பலான யுவான் வோங் - 5 இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வரவுள்ள நிலையில், அந்த விவகாரம் பெரும் சர்ச்சையாக மாறியுள்ளது. செய்மதிகள் மற்றும் கண்டங்களுக்கு இடையிலான ஏவுகணைகள் செலுத்தப்படுவதை கண்காணிக்கும் திறன் உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளைக் கொண்டுள்ள இந்தக் கப்பல் சீன இராணுவத்தின் மூலோபாய படையணியின் கண்காணிப்புக் கப்பல் என்று கூறப்படுகின்றது . இவ்வாறான நிலையில், சீனக் கப்பலின் வருகைக்கு இந்தியா கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தது. அதையடுத்து இலங்கை அரசாங்கம் கப்பல் வருகையை ஒத்தி வைக்கவேண்டும் என்று சீனாவுக்குக் கடிதம் மூலம் கோரியது. இது சீனாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், இலங்கை அதிகாரிகளை உடனடியாகச் சந்திக்க வேண்டும் என்று இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு அதிகளவு கடனுதவி வழங்கும் நாடுகளாக சீனாவும், இந்தியாவும் உள்ளன. இந்த நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள இராஜதந்திர ரீதியிலான முரண்பாடுகள் இலங்கைக்குப் பெரும் தலையிடியாக மாறியுள்ளது.

இத்தகைய பின்னணியில், சீனாவின் ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு இந்தியா வெளியிட்டுள்ள எதிர்ப்புத் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே வாங்வென்பின் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இரு விடயங்களை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். இலங்கை இந்து சமுத்திரத்தின் ஒரு போக்குவரத்துத் தளம். சீனாவின் விஞ்ஞான ஆராய்ச்சிக் கப்பல்கள் உட்பட பல கப்பல்கள் விநியோகத்துக்காக இலங்கைத் துறைமுகங்களில் தரித்து நின்றுள்ளன.

சீனா எப்போதும் ஆழமான கடற்பகுதிகளில் கடல் பயணத்துக்கான சுதந்திரத்தைப் பயன்படுத்தியுள்ளது. கடலோர நாடுகளின் அதிகார வரம்புக்குள் விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கான எல்லையை முழுமையாக மதிக்கின்றது.

இலங்கை இறைமையுள்ள நாடு. தனது அபிவிருத்தி நலன்களை அடிப்படையாகக் கொண்டு அந்த நாடு ஏனைய உலக நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்த முடியும். சீனா - இலங்கை ஒத்துழைப்பு என்பதை இரு நாடுகளும் சுதந்திரமாகத் தெரிவு செய்கின்றன. அவை மூன்றாம் நாட்டை இலக்கு வைப்பதில்லை.

பாதுகாப்புக் கரிசனைகளை முன்வைப்பது இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் அர்த்தமற்ற நடவடிக்கை. சீனாவில் விஞ்ஞான ஆய்வுகளை நியாயமான மற்றும் விவேகமான முறையில் பார்க்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன். இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இயல்பான பரிமாற்றங்கள் மற்றும் ஒத்துழைப்புக்களைக் குழப்புவதை நிறுத்த வேண்டும் - என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது அவர் நேரடியாக 'அந்தக் குழப்பும் சக்தி' இந்தியா என்று குறிப்பிடாமலேயே பதிலளித்துள்ளார் என்பதும் கவனிக்கத்தக்கது. (அ-எ-இ)

## திருக்கோணேஸ்வர...

குற்றஞ்சாட்டப்படுகின்றது.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்குச் செல்லும் வழியின் இரு மருங்கிலும் 2008 ஆம் ஆண்டு இரத்தினபுரியைச் சேர்ந்த பெரும்பான்மையினர் எந்த அனுமதியும் பெறாது தற்காலிகக் கடைகளை அமைத்திருந்தனர். தற்போது அவை மெல்ல மெல்ல அதிகரித்து 58 கடைகளாக மாறியுள்ளன.

ஆலயத்தின் அனுமதி இன்றி அமைக்கப்பட்ட அந்தக் கடைகளை அகற்ற வேண்டும் என்று ஆலய நிர்வாகம் பல இடங்களில் முறைப்பாடளித்திருந்த போதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தற்போது ஆலயத்துக்குச் செல்லும் வீதியின் அருகில் ஆலய சமதரையில் அவர்களுக்கு நிரந்தரக் கடைகளை அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கைகளில் தொல்லியல் திணைக்களம் இறங்கியுள்ளது. கடந்த 3ஆம் திகதி ஆலய நிர்வாக சபைத் தலைவரையும், செயலாளரையும் அழைத்த தொல்லியல் திணைக்களத்தினர், தெருவோரம் வர்த்தகம் செய்வோருக்கு ஆலயத்துக்கு அருகில் நிரந்தரக் கட்டடம் அமைக்க தொல்லியல் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது என்றும், ஆலயமும் அதற்கு சம்மதம் தெரிவிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளனர்.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் திருப்பணி வேலைகள் நடைபெற்றபோது, தொல்லியல் பிரதேசம் என்று கூறித் தொல்லியல் திணைக்களத்தால் பல தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அன்னதான மடச் சீரமைப்பு, வாசல் பெருங் கோபுரக் கட்டுமானம், தோரோடும் வீதி அகலிப்பு என்பன தொல்லியல் திணைக்களத்தால் தடுக்கப்பட்டிருந்தன. தற்போது ஆலயத் திருப்பணி வேலைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று ஆலய அறங்காவலர் சபையும், இந்து சமய நிறுவனங்களும் இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், அங்கு அவசர அவசரமாக பெரும்பான்மையினத்தவருக்கு நிரந்தரக் கடைகளை அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. (அ-எ-இ)

## எரிபொருள்...

இராமநாதபுரத்தைச் சேர்ந்த ஒருவர் உழவு இயந்தி[illegible] திவிட்டுச் சென்[illegible] பின்னர் அன்று இரவு உரிமையாளர் சென்று பார்த்தபோது உழவு இயந்திரத்தைக் காணவில்லை என்றும், இது தொடர்பாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-113)

## பொலிஸ்...

பொலிஸ் மா அதிபர், நீதி அமைச்சர், பொதுப் பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தளபதி, விமானப் படைத் தளபதி, கடற்படைத் தளபதி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசமைப்புச் சட்டத்தின் ஆட்சி மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் விதிமுறைகளுக்கு மாறாகப் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கைது செய்யப்படுவோரைத் தற்காலிகமாக இரகசியக் காவலில் வைத்திருப்பதற்கான நிர்வாக நடைமுறையின் சட்டபூர்வத் தன்மையை மனுதாரர்கள் சவாலுக்குட்படுத்தியுள்ளனர்.

தமது அடையாளத்தைக் காட்டாத, பொலிஸாருக்குச் சொந்தமானது என்று அடையாளம் காணப்படாத வாகனங்களில் போராட்டக்காரர்கள் அழைத்துச் செல்லப்படுவதுடன், சில நேரங்களில் நீதிவான் ஒருவரிடம் முற்படுத்தாமல் பல மணிநேரம் அடையாளம் தெரியாத இடங்களில் அவர்கள் தடுத்து வைக்கப்படுகின்றனர் என்றும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் முன்னாள் ஆணையாளர் மிராக் ரஹீம் ஆகியோர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். (அ-எ-இ)

## கொரோனா....

உயிரிழந்தவர்களில் 60 வயதுக்கு மேற்பட்ட ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் அடங்குகின்றனர் என்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நாட்டில் தற்போது கொரோனாத் தொற்று வேகம் அதிகரித்துள்ளது. நாளாந்தம் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்படும் நிலையில், நாளாந்தம் கொரோனா உயிரிழப்புகளும் பதிவாகி வருகின்றன. (அ-எ-இ)

## சமையல்...

குறைக்கப்பட்டுள்ளது.

5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 99 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 45 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த விலை குறைப்புக்கள் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

## அரிசி...

நிவர்த்தி செய்யக் கூடியதாக உள்ளது என்று தெரிவித்துள்ள அந்தச் சங்கம், அதனால் அரிசி விலை குறைவடையும் என்று தெரிவித்துள்ளது.

அரிசிக்கான கேள்வி குறைந்துள்ள நிலையில், எதிர்காலத்தில் அரிசியின் விலை குறைவடையும் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் பி.கே. ரஞ்சித் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## திருமுறிகண்டி...

செய்யப்பட்டுள்ளது.

22 வயதான இந்த யுவதி கடந்த 27ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளார் என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வீட்டில் இருந்து சிவப்பு நிற சல்வாருடன் புறப்பட்டுச் சென்ற இவர் வீடு திரும்பவில்லை என்று குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (அ-எ-19)

## இன்று...

ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் போராட்டங்கள் மற்றும் பேரணிகளில் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என்று சமூக வலைத்தளங்கள் ஊடாகவும், சுவரொட்டிகள் ஊடாகவும் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தநிலையில் இன்று நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸாருக்கு மேலதிகமாக முப்படையினரும் சில இடங்களில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதுவேளை, இன்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆர்ப்பாட்டத்துக்குத் தடை விதிக்க வேண்டும் என்று பொலிஸார் விடுத்த கோரிக்கையை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோர் ஏதேனும் வன்முறைகளில் ஈடுபட்டால், பொலிஸ் அதிகாரத்தை பயன்படுத்தி மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என தெரிவித்த நீதிவான் போராட்டங்களுக்கு தடை விதிக்கும் பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்தார். (எ-இ)

## பாக். போர்க்...

அதேவேளை, இந்தக் கப்பல் தங்களது நாட்டுத் துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்குப் பங்களாதேஷ் அனுமதி மறுத்துள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 9
யாழ்ப்பாணம் மாநகரசபையின் சைவசமய விவகாரக்குழுவால் வெளியிடப்படும் நல்லைக் குமரன் நூலின் 30ஆவது மலர் வெளியீடு, எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

அதன்போது மலர் வெளியீட்டுரையை யாழ். கல்வியியற் கல்லூரியின் முன்னாள் முதற் பீடாதிபதி முனைவர் திருநாவுக்கரசு கமல நாதன் ஆற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து மலர் வெளியீடு இடம்பெறும். மலரின் முதற் பிரதியை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ் தானத்தினர் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

நல்லைக்குமரன் மலர் வெளியீட்டில் வைத்து ஆண்டுதோறும் 'யாழ் விருது' வழங்கிக் கௌர விக்கப்படுகின்றமை வழமை. இந்த வருடத் துக்கான 'யாழ். விருது' திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபைக்கு வழங்கப்படவுள்ளது.

திருக்கேதீச்சர ஆலய திருப்பணிக்கு பேருதவி புரிந்த இந்திய அரசுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், இந்தியத் துணைத் தூதரகத்துக்கு சிறப்புக் கௌரவமும் வழங்கப்படவுள்ளது.

சைவ சமய விவகாரக் குழுவின் தலைவர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற வுள்ள விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை முதல்வர் விஸ்வலிங்கம் மணி வண்ணன், சிறப்பு விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப் பாளர் அ.உமாமகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-14)

# கிராம்புவில் ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளை!

சாவகச்சேரி, ஓக. 9
சாவகச்சேரி கிராம்புவில் படையாண்டான் கந்த சுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம் பெறவுள்ளது. அத்துடன் தீர்த்தத் திருவிழா நாளைமறுதினம் வியாழக்கிழமை இடம்பெ றும் என்று ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர்.

கிராம்புவில் படையாண்டான் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-14-9)

# அமெரிக்க - சீன மோதலால் இலங்கைக்கு கடும் பாதிப்பு

## கொழும்பு பல்கலையின் விரிவுரையாளர் கலாநிதி பவித்ரா ஜயவர்த்தன சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஓக. 9**
**சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான சர்ச்சைக்குரிய மோதல் நிலைமை மேலும் தீவிரமடைந்தால் இலங்கை போன்ற வளரும் நாடுகள் கடுமையாக பாதிக் கப்படலாம் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பவித்ரா ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான சர்ச்சைக்குரிய நிலைமை தொடர்ந்தும் நீடித்தால், சர்வதேச நிதியங்களைப் பெறும் இலங்கையின் திறன் மற்றும் கடன் மறுசீரமைப்பு ஆகியவை கடுமை யாகப் பாதிக்கப்படும். பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு சர்வதேச நாணய நிதி யத்தின் உதவி உள்ளிட்ட பல்வேறு சர்வதேச உதவிகள் தேவைப்படு கின்றன. இந்த நிலையில் உலகின் பலமான இரண்டு நாடுகளுக்கு இடையில் மோதல் ஏற்பட்டால் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கை போன்ற நாடுகள் ஏதாவது ஒரு நாட்டின் பக்கம் இணைய நேரிடும். ஆனால் யாருடன் இணைவது என் பது மிகப்பெரிய பிரச்சினையாக மாறிவிடும். இரண்டு பக்கமும் இணையாமல் செயற்படலாம் என நினைத்தால் அது முடியாத ஒரு காரியம். இலங்கையால் வெளி நாடுகளின் உதவியின்றி மீண்டு வருவதென்பது இலகுவான விடய மல்ல. ரஷ்யா - உக்ரைன் போரி லும் ஒரு பக்கம் ஆதாரவாக நின்ற தால் பல நாடுகள் எரிபொருள் பெற முடியாமல் தவித்து வருகின்றன. அவ்வாறானதொரு நிலை ஏற்பட் டால், இலங்கையில் விநியோக வலையமைப்பு உள்ளிட்ட பலதுறை கள் கடுமையாகப் பாதிக்கப்படலாம்' -என்றார். (ம)

# முச்சக்கர வண்டிகளுக்கு மேலதிகமான எரிபொருள்

## எரிசக்தி அமைச்சு பரிசீலனை

கொழும்பு, ஓக. 9
பொதுப் போக்குவரத்து மற்றும் ஓட்டோக்களுக்கு மேலதிக மான எரிபொருளை விநியோ கிப்பது தொடர்பில் எரிசக்தி அமைச்சு கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எரி சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இது தொடர்பில் நேற்று மேலும் தெரிவித்தா வது:-
இலங்கைப் போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந் துகள் மற்றும் முச்சக்கரவண் டிகளுக்கான எரிபொருள் தேவைகள் தொடர்பில் தற் போது கலந்துரையாடப்பட்டுவரு கின்றது. மாகாண சபைகளின் உதவியுடன் தேசிய போக்குவ ரத்து ஆணைக்குழுவினால் ஒவ்வொரு பிரிவுக்குமான தேவைகளை இனங்கண்டு, எரிபொருள் தேவைகளை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்கு பரிந்துரைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. பரிந்துரைகள் கிடைத்தவுடன், அடுத்த வாரத்துக்குள் அந்தத் தேவைகளுக்கான கூடுதல் ஒதுக்கீட்டை தனியான கியூ. ஆர். குறியீட்டில் ஒதுக்குவதற் கான வாய்ப்பை அமைச்சகம் பரிசீலிக்கும் -என்றார். (ம)

# கொடுப்பனவை பெற்றுக்கொள்க

சாவகச்சேரி, ஓக. 9
தென்மராட்சிப் பிரதேசத்தில் மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான ஓகஸ்ட் மாதக் கொடுப்பனவுப் பட்டியல் பிரதேச செயலக சமூக சேவைகள் அல காவ் அந்தந்த அஞ்சல் அலுவலகங்க ளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய கொடுப்பனவை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14-9)

**தேவை**
சாவகச்சேரி பெரிய அரசடி பகுதியில் ஆரம்பமாகும் தனியார் வைத்தியசாலைக்கு தாதிய பயிற்சி பெற்றவர்கள் (ஆண்,பெண்) தேவை.
தொடர்புகளுக்கு: 076 658 8555

**காப்பாளர் தேவை**
இணுவிலில் இயங்கும் Hotel ஒன்றிற்கு காப்பாளர் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். வயதெல்லை (45-50) சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம். (CS 45898) (3/6)
தொடர்புகளுக்கு: 077 241 6759

# மே 9 கலவரம் தொடர்பில் ஐ.ம.ச.அமைப்பாளர் கைது

கொழும்பு, ஓக. 9
கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு முயற்சி எடுத்தவர் என்ற சந்தேகத்தில் ஐக்கிய மக்கள் சக் தியின் கெஸ்பேவ தொகுதி அமைப்பா ளர் கயான் டிமெல் கைது செய்யப்பட் டுள்ளார். பிலியந் தலை பொலிஸார் விடுத்த அறிவித்த லின் பிரகாரம், சந் தேகநபர் நேற்றுக் காலை சட்டத்தரணி ஊடாக பொலிஸில் சரணடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்ப டுகின்றது. அதனை யடுத்து பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்தனர். (ம-14-இ)



இலங்கை வங்கியின் 83ஆவது ஆண்டு நிறைவு விழா, கொடிகாமக் கிளையில் அதன் முகாமையாளர் தலைமை யில் அண்மையில் இடம்பெற்றது. (ய-159)

**சொத்துக்கள் விற்பனைக்கு**
- மருதனார்மடத்தில் 20 பரப்பு ( பிரித்துக் கொடுக்கப்படும்.)
- மல்லாகத்தில் 1¾, 3½ பரப்பு
- கோண்டாவில் 1½ பரப்பு
- புன்னாலைக்கட்டுவன் அச்செழு வீதியில் 1½ பரப்புக்காணி
- மருதனார்மடம் உரும்பிராய் வீதியில் 1½ பரப்பு
- தாவடி சுதுமலை வீதியில் 2 பரப்பு காணியுடன் வீடு 1½ பரப்பு காணி
- வடமாகாணத்தில் சொத்துக்கள் வாங்க, விற்க அழையுங்கள் (N.R Realstate)

077 104 8865, 076 707 0743

**காணி விற்பனைக்கு**
யாழ் நாவற்குழியில் 48 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

பார்வை இடும் நேரம் :காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.